# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2421/03 - 2025 ජනවාරි මස 27 වැනි සඳුදා - 2025.01.27

*2421/03 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு சனவரி மாதம் 27 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

**2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்**
**5 ஆம் பிரிவின் கீழான கட்டளை**

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 05 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் அநுர குமார திசாநாயக்க ஆகிய நான், "ரமழான் நோன்பு காலத்தில் இலவசமாக விநியோக்கிக்க இறக்குமதி செய்யப்படும் பேரீச்சம்பழங்களுக்கு வரிச் சலுகைகளை வழங்குதல்" என்ற தலைப்பில் சமர்ப்பிக்கப்பட்ட 24/2293/822/004 ஆம் இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2024, திசெம்பர் 30 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, எந்தவொரு வெளிநாட்டு அரசாங்கங்கள், வர்த்தக நிறுவனங்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் உள்ளிட்ட அமைப்புகள் மற்றும் நலன் விரும்பிகளிடமிருந்து அன்னியச் செலாவணியாக அல்லாது மற்றும் வியாபார நோக்கமல்லாது நன்கொடை அல்லது அன்பளிப்பு என்ற அடிப்படையில் பெற்றுக் கொள்வதற்கு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பரிந்துரையின் பேரில் 2024, திசெம்பர் 31 ஆந் திகதிய 2417/20 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை மூலம் 0804.10.10 மற்றும் 0804.10.20 இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட பேரீச்சம் பழங்களை இறக்குமதி செய்யும் போது கிலோ கிராம் ஒன்றிற்கு 200.00 ரூபாய் என விதிக்கப்பட்ட விசேட வியாபாரப் பண்ட அறவீட்டிலிருந்து கிலோ கிராம் ஒன்றிற்கு 1.00 ரூபாவினை அறவிட்டதன் பின்னரான மீதித் தொகையினை தள்ளுபடிசெய்யவதற்கு இந்தக் கட்டளையினை ஆக்குகிறேன்.

2. இக் கட்டளையானது, 2007ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் பிரிவு 2 இன் உப பிரிவு (3) இன் ஏற்பாடுகளுக்குட்பட்டு 2025, சனவரி 28 முதல் 2025, மாச்சு 31 வரையான காலப்பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2025, சனவரி 27.

EOG 01 - 0280